RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சமூகவியல் நோக்கில் இராஜம்கிருஷ்ணன் நாவல்கள்

**ஈ. இசக்கியம்மாள் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு, சென்னை, தமிழ்நாடு, இந்தியா

# Rajam Krishnan's Novels from a Sociological Perspective

**E. Esakkiammal [a, *]**

[a] Department of Tamil, S.A. Arts and Science College, Thiruverkadu, Chennai, Tamilnadu, India

* Corresponding Author: esakkiammalmarid@gmail.com

Received: 09-12-2025
Revised: 17-02-2026
Accepted: 05-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

The novel as a literary genre can be understood as one that emerged to portray social problems, social changes, and social injustices. Rather than isolating oneself from society, an individual becomes socially conscious by understanding the customs, practices, lifestyle, dress, and behavior of the society of their time. Novels written based on such social consciousness and social realities are referred to as social novels.Rajam Krishnan made her entry into the literary world as a novelist in 1948 through the novel Sudhandhira Jothi and went on to write around forty novels. Her works are deeply rooted in social realities. In 1969, she wrote Valaikaram based on the background of the Goa liberation struggle. In 1970, she explored the lives of salt-pan workers in Karippu Manigal. She examined the life of the Badaga tribal community of the Nilgiris in Kurinjithen. The novel Mullum Malarndhathu focuses on the bandits of the Sembal valley, while Paadhaiyil Padhindha Adigal portrays the life of the communist leader Manalur Maniammai. This paper aims to study Rajam Krishnan's novels from a sociological perspective and analyze the social awareness reflected through his works.

**Keywords:** Social perspective, poverty eradication, social awareness, sexual violence

## முன்னுரை

சமுதாயத்தில் விளைந்து சமுதாயத்தை இயக்கவல்ல ஆற்றல் கொண்டதாக இலக்கியம் திகழ்கின்றது. சமுதாய வளர்ச்சிப் போக்கைக் கூர்ந்து நோக்கும் படைப்பாளர்களே சிறந்த இலக்கியத்தைப் படைக்கின்றனர். அந்த வகையில் தமிழக நாவலாசிரியர்களுள் இராஜம்கிருஷ்ணன் விரிவான ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டியவராவார். அவருடைய கருத்துப்படி "நாவல் என்பது நான்கு சுவர்களுக்குள் அமர்ந்து கற்பனை செய்யும் படைப்பு அல்ல", வாழ்க்கை அனுபவத்தில் இருந்து நாவலாசிரியன் பெறக்கூடிய படிப்பினைகளின் விளைவாகும் என்கிறார். இவரது படைப்பின் நோக்கம் சமூகவியல் கண்ணோட்டத்துடனும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வைத் தூண்டுவதாகவும் இருக்கின்றன. இராஜம்கிருஷ்ணன் தன் கதைக்களன்களுக்கு நேரடியாகச் சென்று மக்களுடன் தங்கி, அவர்களின் வாழ்வியல் பிரச்சனைகளை உற்றுநோக்கி, அவற்றிற்கான தீர்வுகளைத் தனது படைப்புகளின் வாயிலாகச் சமுதாயத்திற்கு வழங்குகிறார். சமுதாயத்தின் நிகழ்வுகளைப் புறவுலகிற்குப் படம்பிடித்துக் காட்டும் பெட்டகமாக விளங்கும் இராஜம்கிருஷ்ணன் நாவல்களைச் சமூகவியல் நோக்கில் அணுகி, அவை வெளிப்படுத்தும் சமுதாய விழிப்புணர்வை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியமும் சமுதாயமும்

இலக்கியத்திற்கும் படைப்பாளிக்குமான தொடர்பு நெருக்கமானதாகவும், உண்மையானதாகவும் இருக்கும்பொழுதே இலக்கியம் சிறப்பானதாகவும் அது மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் அமையும். அத்தகைய நெருக்கம் அவர் கூறுகின்ற சமுதாய நிகழ்வுகளால் உருவாக்கப்படுகின்றது. இதையே மா.இராமலிங்கம் குறிப்பிடும்பொழுது, "சமூக நிகழ்வுகளைக் குறிப்பதே சமுதாயப் பின்னணியாகும். அரசியல், கலை, பொருளாதாரம், கலாச்சாரம் ,பண்பாடு ,நாகரிகம், மதம், இனம், சாதி பாகுபாடுகள் ,கொள்கைகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒன்றே சமுதாய பின்னணியாகும்" (இராமலிங்கம் மா, நாவல் இலக்கியம், பக்கம்-126 ) என்கின்றார்.

மனிதனுடைய ஆளுமைத்திறன் சமுதாயத்தின் மீதும், சமுதாயத்தின் ஆளுமை தனி மனிதன் மீதும் இறுகப்படிந்து ஒன்றையொன்று மாற்றிக் கொண்டே இருக்கின்றன என்பதால் மனிதனும் சமுதாயமும் பிரிக்க முடியாதவர்கள் ஆகின்றனர். மனிதன் தன்னைச் சமுதாயத்தில் இருந்து ஒதுக்கிக் கொள்ளாமல், தனது காலத்தில் சமுதாயத்தில் விளங்குகின்ற பழக்கவழக்கங்களையும், நடைமுறைகளையும் வெளிப்படுத்துவதால் இலக்கியம் சமுதாயத்தின் இன்றியமையாததாகிறது.

"நவீனத் தமிழிலக்கியம் தமிழ்ச் சமூகத்தை விவரிக்கும் ஒரு முக்கிய ஆவணமாகவும் மேற் கிளம்பியுள்ளது" (சிவத்தம்பி. க. இலக்கியமும் கருத்து நிலையும், ப.31). அந்த வகையில், மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளையும்; உளவியல் பிரச்சனைகளையும்; சமூகப் பிரச்சனைகளையும் மையமாகக் கொண்டு எழும் இலக்கிய வகைமையில் நாவலுக்கென்று தனியிடமுண்டு. "மற்றெந்த இலக்கியத்தையும் விட நாவலின் சமூகப் பொறுப்பு அதிகமாயிற்று" (கைலாசபதி.க, நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், ப.51) என்ற கூற்று மேலும் இதற்கு வலுசேர்க்கிறது.

இராஜம்கிருஷ்ணன் நாவல்களின் வழி வெளிப்படும் சமுதாய விழிப்புணர்வு சிறந்த பெண் படைப்பாளர்களுள் மூத்தவராக விளங்கும் இராஜம்கிருஷ்ணன் தனது பெரும்பாலான நாவல்களைச் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவே படைத்துள்ளார். அலைவாய்க்கரை, கரிப்பு மணிகள், கூட்டுக்குஞ்சுகள் ஆகிய நாவல்களின்வழி வெளிப்படும் சமுதாய விழிப்புணர்வை இங்கு காணலாம்.

## வறுமை ஒழிப்பு

சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகள், வாழ்க்கைப் போக்குகள் போன்றவற்றின் அடிப்படையில் 'வறுமை' காணக்கிடக்கிறது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு பிரிவினர்க்கும் அடிப்படைப் பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படுகின்ற நிலையே வறுமை எனப்படுகிறது. பொருள் இல்லாமல் மனிதனால் இயல்பான வாழ்க்கை நடத்த முடிவதில்லை.

"பச்சை வயல்களும் பனிமலை நதிகளும் மட்டுமல்ல

பசித்த வயிறுகளும் தான் பாரதமாகும்"

என்ற வரிகளுக்கேற்ப 'கரிப்பு மணிகள்' நாவலில், அந்த கிராமத்தில் அடுப்பும் கூட இடிந்திருக்கிறது. நீர்ப்பானையும் கூடக் கழுத்தில் ஓட்டையாக இருக்கிறது அதனைத் துணியைச் சுருட்டி அடைத்திருக்கிறார்கள். "மொதலாளியா இருந்து இத்தினி பேருக்கும் கூலி கொடுத்தாலும் காக்கஞ்சிக்கின்னாலும் அடுப்பு புகையாது" என்று அம்மக்கள் புலம்புகிறார்கள். வேலைக்குப் போய் சம்பாதித்து வந்தாலும் அடுப்பை எரியவைக்க முடிவதில்லை, புகையத்தான் செய்கிறது. ஆனால் வறுமையில் அவர்கள் வயிறுதான் எரிகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

கூட்டுக்குஞ்சுகள் நாவலில், வேலைக்குச் செல்லும் குழந்தைகளின் ஏழ்மைத் தோற்றத்தினை "அரைச்சாராய் சட்டைகள், அழுக்குக் கிழிசல்கள், பிரிந்து விழும் முடிகள், உலகத்துச் சிருஷ்டி இரகசியங்கள் புரிந்து விட்டதால் ஏற்பட்ட நாண முகிழ்ப்புகளில் அடங்கிவிட்ட கபடில்லா முகங்கள். கைகளை அலங்கரிக்கும் அலுமினியத் தூக்குகள், சிறுநகர டப்பிகள்" என்று வறுமையின் கோரத்தினைப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்புவதால் வருங்காலச் சமுதாயம் சீரழிக்கப்படுகிறது என்பதனையும் அதற்குத் தீர்வாகக் கல்வி அவசியம் என்ற சமுதாய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறார்.

## கல்வி

மக்கள் தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்வதற்கும் விழிப்புணர்வு அடைவதற்கும் கல்வி மிகவும் இன்றியமையாததாகிறது. குடும்பத் தலைவர்கள் மட்டும் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத நிலையில் குழந்தைகளையும் வேலைக்கு அனுப்புவதின் மூலம் அன்றாடப் பசியைப் போக்கும் பணத்திற்கு முன் கல்வி என்பது தேவையில்லாத ஒன்றாக மாறிவிடுகிற போக்கு காணப்படுகின்றதைச் சுட்டிக்காட்டுகிறார்.

பொருளாதாரத்தினால் மேம்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தீப்பெட்டித் தொழிலுக்குச் செல்கின்றனர். ஆனால் அவர்கள் தொழில் செய்யும் நேரம் போக மற்ற நேரங்களில் படிக்கின்றனர் என்பதை, "புது நகர ஊரில் மச்சு வீட்டுப் பிள்ளைங்க கூடத்தான் கட்டயடுக்குங்க. ஆனால் பள்ளிக்கூடம் போயி படிக்கிறா முன்னுக்கு வரணும்னு ஆசவச்சிட்டிருக்கா. மேலபோறா, கிடுகிடுன்னு படிக்கிறா. பொஞ்சாதி நகையைப் போட்டு வங்கில கடன் வாங்கித் தொழில் தொடங்குறா, முன்னுக்கு வரா" என்ற முனுசாமி கூற்றின் வழிக் கல்வியின் அவசியத்தை உணர்த்துகிறார்.

அடித்தட்டு நிலையில் இருக்கும் மக்களுக்குத் தாழ்வு உணர்ச்சியும் அடிமை மனப்பான்மையும் இருக்கும் வரையில் சமூகத்தில் முன்னேற இயலாது என்பதை எடுத்துக்காட்டி கல்வி பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துகிறார்.

## பாலியல் வன்முறை

பெண்களின் சிந்தனை, செயல்பாடு ஆகியவற்றை முழுமையாக முடக்குவது, ஒடுக்குவது, பெண் சுரண்டப்படுவது, வன்முறைக்கு ஆளாக்கப்படுவது போன்றவை ஆணாதிக்கத்தின் பிரதிபலிப்புகளாகும். ‘அலைவாய்க்கரையில்’ நாவலில், பாலியல் வன்முறையினால் பாதிக்கும் மீனவப் பெண்களின் பாரிதாபமான வாழ்வினை ‘ஏலி’ என்ற பாத்திரத்தின் மூலம் விளக்குகிறார். 'கரிப்பு மணிகள்' காட்டும் பெண்களின் நிலையை,

"சில ஆண்களின்

ஆரோக்கியமில்லாத பார்வைகள் கம்பளிப் புழுக்களாய் உள்முதுகில் ஊறும்

சிலர் கோப்புகளை வாங்கும்போது அவர்களின் விரல்களையும் விசாரிப்பார்கள்"

என்ற கவிதை வரிகளுக்கேற்ப, தொழிற்சாலையில் தேய்ந்து, தன் குடும்பத்துக்கு ஈடு கொடுத்து கால் புண் வந்தாலும் கூடப் பாக்கை உரசி விழுதெடுத்து அப்பிக்கொள்ளும் வழக்கம் இருப்பதை எடுத்துக்காட்டுகின்றார்.

## உடல்நலப் பாதுகாப்பு

உப்பளத்தில் வெறுங்காலோடு செய்நேர்த்தி (பாத்தி மிதிப்பு) செய்யும்பொழுது தொழிலாளர்களின் கால்களில் வெடிப்புகள் ஏற்படுகின்றன. விடுப்பு எடுத்தால் ஊதியம் இல்லை என்ற காரணத்தால் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வருவதைக் கரிப்பு மணிகள் நாவலில் ஆசிரியர் காட்டுகிறார்.

காலையில் சூரியன் எழுவதற்குமுன் தொழிற்சாலைக்கு வேலைக்குச் செல்லும் சிறுவர்கள் இரவு சூரியன் மறைத்த பிறகுதான் வீடு திரும்புகிறார்கள். குளிப்பதற்குக்கூட நேரமின்மையால் உடலின் தூய்மை கெட்டு அவர்களின் உடல் நலம் சீர்கேடு அடைகிறது. மேலும், பாதுகாப்பற்ற சுகாதாரமற்ற சூழ்நிலையில் வேலை செய்வதால் பல்வேறு நோய்கள் அக்குழந்தைகளைத் தாக்குகின்ற அபாயம் இருப்பதைக் கூட்டுக்குஞ்சுகள் நாவலில் விளக்குகிறார்.

உப்பளத் தொழிலாளர்கள் கடுமையான வெப்பத்திலும் நின்று கொண்டே பணி செய்வதால் சூரியனின் கதிர்வீச்சு உப்பின் மீது பட்டு எதிரொளித்து அவர்களின் கண் பார்வையினை மங்கச் செய்கிறது. இதனைத் தடுக்க, குளிர்கண்ணாடி கொடுக்க வேண்டும் என்ற விழிப்புணர்வே இல்லாமல் தொழிலாளர்களை வேலை வாங்கும் கங்காணியையும், முதலாளிகளையும் ஆசிரியர் நாவலின் வழி அடையாளப்படுத்துகிறார்.

## ஒற்றுமையின் தேவை

கடற்கரையில் மிக முக்கியமான சொத்து என்பது மீனும், மீனை விற்று வரக்கூடிய பொருளும் ஆகும். 'துவி' வடிவத்தில் மீனின் இலாபத்தில் பெரும் பகுதியைப் பெறுகின்ற சர்ச், சுரண்டலின் அடையாளமாக விளங்குகிறது என்பதை 'அலைவாய்க்கரை' நாவல் எடுத்துக்காட்டுகிறது.

கரிப்பு மணிகள் நாவலில், உப்பளத் தொழிலாளர்களின் மீது கண்காணிகளும் கான்டராக்டர்களும் செய்யும் கூலிக் குறைப்பு மற்றும் அடாவடித்தனங்கள், பெண்களைப் போகப் பொருளாக எண்ணி அவர்களைச் சீண்டும் இழி செயல்கள் போன்றவற்றையும் எடுத்துக்காட்டுகிறார்.

தொழிலாளர்களை ஒன்றுபடுத்துவது தொழிற்சங்கம் தான். தொழிற்சங்கத்தினால் தொழிலாளர்களின் குறைகள் நீக்கப்படுவதின் மூலம் தொழில் பெருக வாய்ப்புள்ளது. மனித ஆற்றலை ஆக்கப்பூர்வமான தொழிலுக்குப் பயன்படுத்துவதில் தொழிற்சங்கங்கள் இன்றியமையாதவையாக இருப்பதால், ஆசிரியர் நாவலில் தொழிலாளர் ஒற்றுமையையும் தொழிற்சங்கத் தேவையினையும் வலியுறுத்துவதன் மூலம் மக்களிடையே சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார்.

## முடிவுரை

குழந்தைத் தொழிலாளர்களின் வறுமை நிலையினையும், சுரண்டலுக்கு உள்ளான மீனவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தையும், உப்புத் தொழிலாளர்களின் வாழ்வியல் பிரச்சனைகளையும் எடுத்துக்காட்டுவதுடன், வறுமை ஒழிப்பு, கட்டாயக்கல்வி, தொழிற்சங்கம் நிறுவுதல், உடல்நலப் பாதுகாப்பு போன்றவற்றைத் தீர்வுகளாகக் குறிப்பிடுவதன் மூலம் இராஜம்கிருஷ்ணனின் நாவல்கள் மக்களிடையே சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவனாக இருப்பதை அறியமுடிகிறது.

## References


Kailasapathy K, Naveena Ilakkiyaththin Adippadaigal, Kumaran Puthaga Illam, Sri Lanka.

Rajam Krishnan, Alaivaaikkaraiyil, Thaagam Pathippagam, Chennai.

Rajam Krishnan, Karippu Manigal, Nakkeeran Pathippagam, Chennai.

Rajam Krishnan, Koottu Kunjugal, Kaappiya Vaasippagam.

Rajam Krishnan, Saetril Manithargal, Sri Senbhaga Pathippagam, Chennai.

Rajam Krishnan, Uththarakandam, Naam Tamilar Pathippagam, Chennai.

Rajam Krishnan, Verukku Neer, Amaravathi Pathippagam, Chennai.

Ramaligam M, Naval Ilakkiyam, Meenatchi Puthaga Nilayam, Madurai.

Sivathambi K, Ilakkiyamum Karuththiyalnilaiyum, NCBH, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License